**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 18** **நாள் : 25.01.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நெகிழிப் பொருட்கள் பயன்பாட்டைத் தவிர்த்தல் குறித்த விழிப்புணர்வினை பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் வகையில், நெகிழி ஒழிப்பு மற்றும் மீண்டும் மஞ்சப்பை விழிப்புணர்வுப் பேரணியை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே. சேகர்பாபு அவர்கள் இன்று தொடங்கி வைத்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நெகிழிப் பொருட்கள் பயன்பாட்டைத் தவிர்த்தல் குறித்த விழிப்புணர்வினை பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் வகையில், திரு.வி.க. நகர் மண்டலம், பெரம்பூர், ஜமாலியா பகுதியில் மாண்புமிகு மேயர் அவர்களின் வார்டு அலுவலகத்தில் தொடங்கி குக்ஸ் சாலை சென்னை பள்ளி வரை நடைபெற்ற பள்ளி மாணவ, மாணவியர் கலந்து கொண்ட நெகிழி ஒழிப்பு மற்றும் மீண்டும் மஞ்சப்பை விழிப்புணர்வுப் பேரணியை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே. சேகர்பாபு அவர்கள், மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா ஆகியோர் இன்று (25.01.2025) கொடியசைத்துத் தொடங்கி வைத்தனர்.

**இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மேயர் அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது :**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து மண்டலங்களிலும் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பில் நெகிழிப் பொருட்கள் பயன்பாட்டைத் தவிர்ப்பது குறித்து விழிப்புணர்வினை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் மாணவ, மாணவியர், தன்னார்வலர்கள் கலந்து கொண்ட நெகிழி ஒழிப்பு மற்றும் மீண்டும் மஞ்சப்பை விழிப்புணர்வுப் பேரணி திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட வார்டு-74ல் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

அனைத்து மண்டலங்களிலும் இந்த விழிப்புணர்வுப் பேரணி தொடர்ந்து நடத்தப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, ஒவ்வொரு மாதமும் 4வது சனிக்கிழமை அன்று இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியானது நடத்தப்படும்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில், நெகிழிப் பொருட்களால் ஏற்படும் சுகாதாரக் கேடுகள், இனிவரும் தலைமுறையினருக்கு நெகிழிப் பொருட்கள் என்னென்ன தீங்குகள் ஏற்படுத்தும்

என்பது குறித்தும், குப்பைகளை மக்கும், மக்காத குப்பைகள் என முறையாகப் பிரித்து வழங்குவது குறித்தும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. விழிப்புணர்வு பேரணி மட்டுமில்லாமல் ஒவ்வொரு மாதத்தின் 4வது சனிக்கிழமைகளில் மெரினா, பெசன்ட் நகர் மற்றும் திருவான்மியூர் உள்ளிட்ட கடற்கரைப் பகுதிகளில் தீவிரத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த நெகிழி ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் பள்ளி/கல்லூரி மாணவ, மாணவியர், தன்னார்வலர்கள் பங்கேற்கின்றனர்.

அடுத்த தலைமுறையினருக்கு நம்முடைய சமுதாயத்தை பாதுகாத்து வழங்குவது நம்முடைய பொறுப்பாகும். மேலும், வீடுகள்தோறும் குப்பைகள் சேகரிக்க வருகைதரும் தூய்மைப் பணியாளர்களிடம் குப்பைகளை மக்கும், மக்காத குப்பைகள் என முறையாகப் பிரித்து வழங்குவது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

இந்த விழிப்புணர்வுப் பணிகளுக்காக தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியம் மூலமாக ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் இந்தப் பணியானது தொடர்ந்து நடைபெறும்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மார்க்கெட் பகுதிகள் மற்றும் பொது இடங்களில் மீண்டும் மஞ்சப்பை திட்டத்தை செயல்படுத்தும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு கடந்த நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக 50 ஆயிரம் மஞ்சப்பைகள் வியாபாரிகள் நலச்சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இந்த நிதியாண்டில் அம்பத்தூர் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு, மஞ்சப்பைகள் வழங்கப்பட்டு வருகிறது.

கடற்கரைப் பகுதிகளில் பிளாஸ்டிக் கழிவுகளைப் போடுவதற்காக தனியாக குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தனிநபரிடமிருந்து மாற்றம் கொண்டு வந்தால் தான் சமுதாயத்தில் மாற்றத்தை கொண்டு வர முடியும். எனவே, பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டைத் தவிர்த்து, அதற்கு மாற்றாக மக்கும் தன்மையுடைய பொருட்களைப் பயன்படுத்தி சுற்றுச்சூழலை பாதுகாத்திடவும், மாநகராட்சியின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மீண்டும் மஞ்சப்பை குறித்த விழிப்புணர்வு தற்போது பொதுமக்களிடையே இருக்கிறது. மஞ்சப்பைகளை பயன்படுத்துவதினால் எந்தளவிற்கு உபயோகமாக இருக்கிறது. நெகிழிப்

பைகளை பயன்படுத்துவதனால் என்னென்ன தீமைகள் ஏற்படுகிறது. ஒரு மஞ்சப்பை என்பது ஒரு பத்து முறையாவது பயன்படுத்துவோம். ஆனால் நெகிழிப் பைகள் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தி தூக்கி எறியப்படுகிறது. இந்த ஒருமுறை பயன்படுத்தப்படும் நெகிழிப் பொருட்களால் என்னென்ன விளைவுகள் ஏற்படுகிறது என்றும், அடுத்த தலைமுறையினருக்கு என்னென்ன பாதிப்புகள் ஏற்படும் என்பது குறித்தும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி, நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டலக் குழுத்தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**